<u>முதன்மை  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.பொள்ளாச்சி</u>

நாள்: 17.03.2026,அ.வ.எண்.55/2016, பி.வா.சா.1. பிரபு,. த/பெ.செல்லமுத்து

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு  வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) தாவா சொத்து திப்பம்பட்டி கிராமத்தில் உள்ளது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது வீடு கோவிலுக்கு தென்புறமாக உள்ளது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை ஆதார் அடையாள அட்டை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன். திப்பம்பட்டி கிராமத்தில் சுமார் 2000 மக்கள் குடியிருப்பார்கள் என்றால் சரிதான். எனக்கு எதிராக மட்டும் தான்  இந்த கோவில் சம்மந்தமாக எங்களது சமூகத்தை சேர்ந்தவர்கள் வேறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.எங்களது வீதியின் தடத்தை மறித்து கோவில் சுற்றுச் சுவர் கட்டியதால் தான் இந்த வழக்கு.

2) கோவில் சுற்றுச்சுவருக்கும் எனது இடத்திற்கும் இடையே சுமார் 2 அடி பாதை இதுநாள் வரையில் உள்ளது என்றால் இல்லை. பாதையை ஆக்கிரமிப்பு செய்து கோவில் சுற்றுச்சுவர் கட்டிவிட்டார்கள் என்பதை நிரூபிக்க நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் நான் எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளேன். நீதிமன்ற ஆணையர் மூலமாக எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வடபுறமாக 6 அடி அகலத்தில் 35 நீளத்தில் உள்ள நடைபாதையை அடைத்து கட்டியுள்ளார்களா என்றால் அதை தான் அடைத்து கட்டியுள்ளார்கள்.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

ஆக்கிரமிப்பு செய்து அடைத்து கட்டியது எந்த ஆண்டு என்றால் 2015 ம் ஆண்டு ஆகும்.

3) ஆக்கிரமிப்பு செய்து அடைத்து கட்டியதில் எனக்கு என்ன பாதிப்பு என்றால் பலவருடமாக நடந்து சென்ற பாதையை அடைத்து விட்டார்கள் மேலும் எனது வீட்டை சுற்றிலும் இருந்த பாதையையும் ரோட்டை 15 அடிக்கு ஆக்கிரமிப்பு செய்து கோவில் சுவர் கட்டி விட்டதால் எனது வீட்டை அடைவதற்கு வேறு வழியில்லை,. எனது வீட்டிற்கு முன்புறம் எத்தனை அடி ரோடு இருந்தது என்றால் 15 அடி ரோடு இருந்தது. 8 அடியை அடைத்து கட்டிவிட்டார்கள் . மேற்படிரோடு எனது சொந்த பூமியா அல்லது பஞ்சாயத்திற்கு உட்பட்டதா என்றால் பஞ்சாயதிற்கு உட்பட்டது ஆகும், எனது சொந்த பூமியை கோவில் நிர்வாகம் எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் செய்துள்ளார்கள். எனது வீட்டை சுற்றிலும் சுற்றுச்சுவர் உள்ளது என்றால் சரிதான்.

4) எனக்கு பாத்தியப்பட்ட மற்றொரு இடத்தை ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள்.எனக்கு 2 இடம் உள்ளது என்றும் அதில் ஒரு இடத்தை கோவில் நிர்வாகம் ஆக்கிமித்துவிட்டார்கள் என்று எனது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். எனக்கு மற்றொரு இடம்உள்ளது என்பதை நிரூபிக்க ஆவணங்களோ அல்லது அதற்கான சொத்து விவரங்கள் க.ச.எண்.எனது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. எனது எதிர் வழக்குரையில் திப்பம்பட்டி பஞ்சாயத்தால் போடப்பட்ட கான்க்ரீட் சாலையை ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

5) மேற்படி ஆக்கிரமிப்பை நீக்கறவு செய்ய நான் தனிப்பட்ட முறையிலோ

ஒப்பம்/-(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

அல்லது பஞ்சாயத்தின் மூலமாகவோ நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு முடிந்தவுடன் பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டேன். இந்த வழக்கில் திப்பம்பட்டி பஞ்சாயத்தார் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். ஆக்கிரமிப்பு இருந்தால் பஞ்சாயத்து நிர்வாகமே மேற்படி ஆக்கிரமிப்பை நீக்கிவிடும் என்றும் அவ்வாறு ஆக்கிரமிப்பு எதுவும் இல்லாததால் தான் பஞ்சாயத்து நிர்வாகம் இது நாள் வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

6) கோவில் நிர்வாகத்தின் மீது ஆக்கிரமிப்பை நீக்க வேண்டும் என்று இந்த வழக்கை தவிர வேறு ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது அம்மா வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் கூறியுள்ள 2 சொத்துக்களும் எனது அம்மா பெயரில் தான் உள்ளதா என்றால் ஆமாம். கோவிலுக்கு அருகில் உள்ள சொத்துக்கள் எனது அம்மாவிற்கு பாத்தியப்பட்டது என்று எனது எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. எதிர்வாதத்தில் கோவிலுக்கு அருகில் உள்ள சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்று பொய்யான எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7) மேற்படி விவரங்களை மறைப்பதற்காகத் தான் நான் சொத்து உரிமையை நிலைநாட்ட எந்த ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கோவில் கட்டுவதற்கு முன்பே அந்த இடத்தை அளவீடு செய்து கட்டப்பட்டது என்றால் அளவீடு செய்யவில்லை. வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் கோவில் கட்டுவதற்கு முன்பே அந்த இடத்தை அளவீடு செய்து தான் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. கோவில் சாலையை ஆக்கிரமிப்பு செய்து

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

கட்டியிருந்தால் பொது மக்களுக்கு இடையூறாக இருந்திருக்கும் அதனால் அவர்களே நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கை நடத்தி வருவதால் அவர்கள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

8) நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட உறுத்துக்கட்டளையை மீறி நான் கோவில் கட்டுவதை தடுத்தேன் என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டு இதுநாள் வரையில் நீதிமன்ற ஜப்தியில் தான் எனது சொத்துக்கள் உள்ளது என்றால் சரியல்ல. கோவில் கட்டுவதை நான் தடுக்கவில்லை எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டியதால் நான் தடுத்தேன். எனது எதிர்வாதத்தில் குறிப்பிட்டுள்ள அளவுகள் எதை வைத்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் வரைபடத்தை வைத்து குறிப்பிட்டுள்ளேன். வா சா ஆ 4 ல் உள்ள அளவுகளுக்குள் கோவில் கட்டுவதற்கு எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் கோவிலை சுற்றியுள்ள இடம்நத்தம் புறம்போக்கு இடம். அதில் கட்டுவதற்கு எனக்கு ஆட்சேபணை உள்ளது.

9) வா சா ஆ 7 ல் தென்புறம் உள்ள 2.2 என்று குறியீடு செய்யப்பட்டுள்ள இடம் முழுவதுமே பொது தடமாகத்தான் உள்ளது. ஆனால் மேற்படி வரைபடத்தில் 2.2 தடத்தையும் தாண்டி இடம் விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பூமிக்கு தென்புறம் 2 அடியில் தடம் உள்ளது என்றும் அதை தாண்டித்தான் எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளது என்றால் எங்கள் மூன்று பேர் பெயரிலுமே பட்டா உள்ளது. கோவிலுக்கு தென்புறமும் கிழபுறமும் உள்ள இடம் நத்தம் புறம்போக்கு நடைபாதை என்றால் சரிதான்.வடக்கு நத்தம் புறம்போக்கு, மேற்கில் எனது அம்மா பெயரில் உள்ள சொத்து உள்ளது. வா சா ஆ 4 ல் கோவில் என்று காட்டப்பட்டுள்ள இடத்திற்கு பின்புறத்தில் 332/6 எனது அம்மா பெயரில் உள்ளது.

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

10) சுற்றியுள்ள பூமி நத்தம் புறம்போக்கு என்பால் வாதிகள் கோவில் கட்டுவதை இடையூறு செய்வதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் கோவில் கட்டி 7 வருடங்களுக்கு மேல் ஆகிறது. மேற்புறத்து சுவர் கட்டிவிட்டார்களா என்றால் எங்களதுஇடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டியுள்ளதால் நாங்கள் தடுத்து வைத்துள்ளோம். க..ச.எண்.332/8 வாதிகள் கோவிலோ சுற்றுச்சுவரோ கட்டுவதற்கு எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் உள்ளது. ஏற்கனவே இருந்த அளவை மீறி கட்டுவதற்கு எனக்கு ஆட்சேபணை உள்ளது. க.ச.எண்.332/8 ல் எனக்கோ எனது சகோதரருக்கோ அல்லது எனது தாயாருக்கோ உரிமை உள்ளதா என்றால் இல்லை. க.ச.எண். 332/8 ல் கோவில் இப்படிதான் கட்ட வேண்டும் என்று நான் உத்தரவு போடமுடியாது என்றால் சரிதான். வாதிகள் அவர்களுக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.332/8 ல் தான் கோவில், அதன் சுற்றுச்சுவர் கட்டிவருகிறார்கள் என்றும் மேபுறத்து சுற்றுச்சுவர் கட்டவிடாமல் நான் இதுநாள் வரை தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. எங்களது இடத்திற்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்பதால் இது நாள் வரையில் ஆக்கிரமிப்பை நீக்க வேண்டும் என்று எவ்வித சட்டப்படியான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எங்களது இடத்திற்குள் நான் கம்பிவேலி அமைத்துவிட்டேன்.

11) மேற்படி கம்பிவேலி க.ச.எண். 332/8 ல் அமைந்துள்ளதா என்றால் இல்லை , மேற்படி கம்பிவேலி க.ச.எண். 332/8 ல் அமைந்திருந்தால் அதை நீக்குவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். மேற்படி கம்பிவேலியானது கோவிலின் மேற்புற பக்கம் தான் அமைத்துள்ளோம் என்றால்

ஒப்பம்/−(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

சரிதான். நீதிமன்றம் நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியதற்கு பின்னிட்டு மேற்படி கம்பிவேலி போடப்பட்டது என்றால் சரியல்ல .அதற்கு முன்பே போட்டுவிட்டோம். நான் கம்பிவேலி அமைத்ததால் தான் வாதிகளால் கோவிலின் மேற்புற சுவற்றை கட்டிமுடிக்கமுடியவில்லை என்றால் சரிதான்.

12) கோவிலுக்கு மேபுறமும் எனது வீட்டின் கிழபுறமும் நடுவில் எவ்வித நடைபாதையும் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் நான் தாக்கல் செய்துள்ள எதிர்வாதமே நடைபாதையை அடைத்து கோவில் சுற்றுச்சுவர் கட்டியதாகத்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா சா ஆ 4 ல் குறிப்பிட்டுள்ள க.ச.எண்.332/8 ற்கு தென்புறமுள்ள நடைபாதையை உபயோகித்துதான் எங்களுக்கு பாத்தியப்பட்ட க.சஎண் 332/9 அடைகிறேன் என்றால் சரிதான். மேற்படி நடைபாதை 7 அடி அகலம் உடையதாகும்.

13) வாதிகள் எவ்வித நடைபாதையையும் ஆக்கிரமிக்கவும்இல்லை அடைக்கவும் இல்லை என்றும் நான் தான் உறுத்துக்கட்டளை உத்தரவு நிலுவையில் இருக்கும் போதே கோவிலின் மேற்புற சுவரை கட்டுவதை தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. சட்டவிரோதமாக நான் அமைத்துள்ள கம்பிவேலியை நீக்கறவு செய்ய நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி